**இலங்கை தேசிய வாற்பயிற்சி சங்கம் - 2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை தேசிய வாற்பயிற்சி சங்கத்தின் (''சங்கம்'') 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, திரண்ட நிதியக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) அத்காரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவால் திருத்தப்பட்ட 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டக்கள் சட்டத்தின் 21 அ ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சங்கத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளிற்கான (SLFRS for SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளிற்கான (SMEs இற்கான SLFRS) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படவும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சங்கத்தின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் சங்கத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4. கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சங்கத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சங்கத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சங்கம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும் ஆகும்.

### 1.5. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2024 மே 03 ஆந் திகதிய 2382/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணியில் வெளியிடப்பட்ட 2024 இன் 1 ஆம் இலக்க தேசிய விளயாட்டுக்கள் சங்க பிரமாணங்கள் | | | |
| (i) பகுதி II இன் பந்தி 3(1) (i) | சங்கத்தின் தேர்தலைமப்பு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அந்த பிரமாணங்களின் தொடங்கிய திகதியிலிருந்து 3 மாதங்களிற்குள் | திருத்தப்பட்ட தேர்தலைமப்பு இரண்டு தடவை விளையாட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் இது அனுமதிக்கப்படவில்லை | சங்கத்தின் தேர்தலமைப்பு மேலும் தாமதமில்லாமல் பதிவதற்கு முன்வைக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | பகுதி III இன் பந்தி 6 (x) | சங்கமானது நிதி உதவியை பெறுவதற்கு வரிசை அமைச்சுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை | விளையாட்டு அமைச்சு அமைச்சு புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடுவதற்கு எங்களுக்கு ஒருபோது அறிவிக்கவில்லை. | சங்கம் விளையாட்டு பிரமாணங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (iii) | பகுதி III இன் பந்தி 6 (xx) (அ) | பிரதான விளையாட்டு குழுக்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை மற்றும் கண்காணித்தல் மற்றும் பிராந்திய விளையாட்டுக் குழுக்கள் என்பவற்றிற்கு வசதியளித்தல் அறிக்கை விளையாட்டு அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நடைமுறைகள் நடைமுறைக்கு சாத்தியமற்றிருந்ததுடன் இது தொடர்ச்சியாக விளையாட்டு அமைச்சிற்கு தொடர்புபடுத்தப் பட்டிருந்தது. | சங்கம் விளையாட்டு பிரமாணங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (iv) | பகுதி III இன் பந்தி 6 (xxvii) (அ) | விளையாட்டு குழுக்கள், நிறுவனங்கள், மாவட்ட விளையாட்டு சங்கங்கள், மாகாண விளையாட்டு சங்கங்கள் என்பவற்றின் தேர்தல் மற்றும் அமைப்பின் உறுப்பினரகள் உள்ளடங்கிய சகல நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் விளையாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயத்திற்கு சங்கத்தால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தகையவாறு இந்த அறிக்கை திகதிவரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான சங்கத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 345,477 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 231,800 ஆக இருந்தது. ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 113,677 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய அண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 55,478 மற்றும் ரூபா 424,519 ஆல் முறையே ஆதரவாளர் வருமான வீழ்ச்சி மற்றும் போட்டிச் செலவினம் அதிகரிப்பு என்பன வீழ்ச்சிக்கான பிதான காணமாக இருந்தது.